STAFF COPY
NOT FOR SALE

Registered as a Newspaper

BITSMANS
INSTITUTES
Manipay
A/L 88
★ வெப்ப இரசாயனம்
திரு. மகாதேவா
B. Sc. (Hons.)
ஆரம்பம்: April 18ல்
Sat. 12-30
நேர அட்டவணை:
Sat Sun. 12-30 p. m.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விலை: ரூ. 1-25

A/L 89 (பிரிவு 8)
★ பௌதிகம் ★
திரு சௌந்தி
B. Sc. (Hons.)
ஆரம்பம்: APRIL 18ல்
Sat 7-45 a. m.
நேர அட்டவணை;
Sat Sun. 7-45 a. m.
விபரங்களுக்கு:
BITSMANS
INSTITUTES
Manipay

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆண்டு சித்திரை மீ 4 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஷஃபா பிறை 17 (17.04 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 120

# ராணுவ வண்டித் தொடர் மீது மன்னாரில் கண்ணிவெடி

## 4 படையினர் பலி; மற்றும் 6 பேர் காயம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

இராணுவ நடவடிக்கை நிறுத்த காலத்தில், இராணுவத் தொடர் வண்டிகளில் படையினர் மன்னாரில் ரோந்து நடவடிக்கை மேற்கொண்டனர்.

அவ்வேளை போராளிகள் தொடர் வண்டி ரோந்து நடவடிக்கை இடம்பெற்ற உயிலங்குளம் பகுதியில் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தினர்.

கண்ணிவெடித் தாக்குதலில் இராணுவ வாகனம் ஒன்று சுக்கு நூறாகியது. மற்றும் சில சேதமடைந்தன.

சுக்கு நூறாகிய வாகனத்தில் இருந்தவர்களில் நான்கு படையினர் கண்ணிவெடித் தாக்குதல் நடந்த இடத்திலேயே பலியாகினர். மற்றும் வாகனங்களில் இருந்த 6 பேர் படுகாயமுற்றனர்.

மன்னார் உயிலங்குளத்திற்கு சமீபமாக ரோந்து சென்ற இராணுவ வண்டித் தொடர் மீது நேற்றுக் காலை போராளிகள் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் நான்கு சிப்பாய்கள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

அவர்களில் ஒருவர் கப்டன் ஆவார். ஆறு பேர் படுகாயமடைந்தனர், படுகாயமடைந்தவர்களில் நால்வர் ஆபத்தான கட்டத்தில் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கண்ணிவெடியில் சிக்கிய இராணுவ வாகனம் சுக்குநூறாகிச் சிதறியது. காயமடைந்தோர் ஹெலிக்கொப்டர் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். இறந்தவர்களின் சடலங்களும் அனுராதபுரத்துக்கே எடுத்துச் செல்லப்பட்டன.

கண்ணிவெடித் தாக்குதலை அடுத்துப் படையினர் அப்பகுதியில் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக கூறப்படுகிறது. இதனால் ஏற்பட்ட சேதவிபரங்கள் பற்றி தகவல் ஏதும் கிடைக்கவில்லை (உ-10)



தாங்கள் கோவிலை செல்றிதிப்பினம். ஆனால் கோயில் மீது ஷெல் அடிச்ச உடனே அங்கை போராளிகள் நிண்டு தாக்கினதாகச் சொல்லுவினம்.

சும்மா சொல்லக் கூடாது. சொந்த அனுபவம் பேசுறது என்டது சரி தான்......!

### நீர்கொழும்பில் 4 தமிழர் கைது

கொழும்பு, ஏப். 17

நீர்கொழும்பு மாநகரில் அடாட்புவ என்னும் இடத்தில் உள்ள வீடு ஒன்றில் நான்கு தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர். தற்போது நால்வரும் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (உ-எ)

### வல்லைவெளியில் சைக்கிளில் பயணம் செய்தவர் எங்கே?

அச்சுவேலி, ஏப் 17

வல்லைவெளியில் சைக்கிளில் பிரயாணம் செய்தவர் எங்கே? ஹெலியில் வந்தவர்களினால் தூக்கிச் செல்லப்பட்டாரா?

வடமராட்சிப் பகுதியில் இருந்து அச்சுவேலிப் பகுதியை நோக்கி சைக்கிளில் வந்த ஒருவரின் சைக்கிளும் தொப்பியும் மீட்கப்பட்டன. ஆனால் ஆளைக் காணவில்லை.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

புதன்கிழமை மாலையில் ஹெலி ஒன்று வல்லை வெளியில் மிகத் தாழப் பறந்து கண்காணித்தது.

நெல்லியடியில் இருந்து சைக்கிளில் இருவர் பிரயாணம் செய்து கொண்டிருந்தனர்

இவர்களைக் கண்ட ஹெலி ஒன்று மிகத் தாழப் பறந்து தரையிறங்க முயற்சித்தது இதனை அவதானித்த இருவரும் சைக்கிளைப் போட்டுவிட்டு ஒரு பற்றைக்குள் ஒளித்துக் கொண்டனர். ஹெலி மேலெழுந்து பறந்ததும் மீண்டும் தாம் வந்த வழியே பிரயாணத்தைத் தொடர்ந்தனர்

மீண்டும் ஹெலி தாழப் பறந்ததும் இருவரும் வெவ்வேறு பற்றைக்குள் ஒளித்தனர். ஹெலி சென்றதும் ஒருவர் மட்டுமே வெளியே வந்தார் அவர் தன்னுடன் கூட வந்தவரின் துவிச்சக்கரவண்டியும் தொப்பியும் மட்டும் இடக்கக் கண்டார் மற்றவரைக் கூப்பிட்டுப் பார்த்தார். ஆளைக் காணவில்லையாம்.

இதுபற்றி இளைஞர்கள் அறிந்ததும் அந்த இடத்துக்குச் சென்று தேடுதல் நடத்திய போதிலும் மறைந்தவர் பற்றி எது வித தகவலும் கிடைக்கவில்லை என கூறப்படுகின்றது (உ-11)

### முருகன் ஆலயத்தில் இராணுவ 'சென்றி'

மட்டு. அரச அதிபரிடம் முறையீடு

மட்டக்களப்பு, ஏப் 17

பட்டிப்பளை உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள கல்லோயா முருகன் ஆலயத்தை 'சென்றி' யாக பாதுகாப்புப் படையினர் பாவித்து வருகிறனர்.

மட்டக்களப்பு அரச அதிபரிடம் இது பற்றி முறையிடப்பட்டது.

மட்டக்களப்பு சாந்தி சேவா சங்கப் பொதுச் செயலாளர் திரு. கதிர் பாரதிதாஸன் இம் முறைப்பாட்டைச் செய்தார்

இதனிடையில் கல்லோயா பாடசாலையை பாதுகாப்புப்படையினர் தமது முகாமாகப் பயன்படுத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலையின் அருகில் உள்ள விடுகளையும் கட்டடங்களையும் புல்டோசர் பாவித்து படையினர் உடைத்து வருகின்றனர்.

இக்கிராமத்தில் இருந்த சுமார் 85 குடும்பங்கள் இடம் பெயர்ந்திருக்கின்றன. (உ-ச)

### உண்ணாவிரதிகளுக்கு பலாத்காரமாக உணவு ஊட்ட முயற்சி

கொழும்பு, ஏப். 17

சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு பலாத்காரமாக உணவு ஊட்டும் முயற்சியில் சிறை அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்று அறியவருகின்றது

சிறை அதிகாரிகளின் நிர்ப்பந்தம் பொறுக்க முடியாமல் 3 அரசியல் கைதிகள் உண்ணாவிரதத்தைக் கைவிட்டுவிட்டனர் என்றும் அறியப்படுகின்றது.

கடந்த 5ஆம் திகதியில் இருந்து இந்தக் கைதிகள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

வெலிக்கடையில் 10 பேரும் போகம்பரையில் 10 பேரும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

18 மாதங்களுக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்யுங்கள்; அல்லது நீதிமன்றம் முன் நிறுத்துங்கள் - இந்தக் கோரிக்கையை முன்வைத்தே இந்த உண்ணாவிரத இயக்கம் நடைபெறுகின்றது.

இதனிடையில் உண்ணாவிரதத்துக்கு ஆதரவு தெரிவித்து சென்னை மரீனா கடற்கரையில் நடத்தப்படும் தொடர் உண்ணாவிரதம் நேற்று ஏழாவது நாளாக நடைபெற்றது. (உ-ச)

### ஜனாதிபதி அலுவலகத்தின் பணிப்பை அடுத்து

## வெளிவிவகார அதிகாரிகள் புதுடில்லி செல்ல தயார் நிலையில்

கொழும்பு, ஏப். 17

புதுடில்லி பயணத்துக்கான உஷார் நிலையில் கொழும்பு வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் உள்ளனர்.

தயார் நிலையில் இருக்கும்படி ஜனாதிபதி அலுவலகம் வெளிவிவகார அமைச்சுக்கு அறிவித்ததைத்தொடர்ந்தே இந்த உஷார் நிலை என்று, கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

போராளிகளுடனான பேச்சுக்கள் வெற்றி அடைந்தால் புதுடில்லி சென்று உடன்பாடு ஒன்றில் இந்தியாவுடன் கைச்சாத்திட இலங்கை தயாராக இருப்பதாக அமைச்சர் லலித் அத்துலத்முதலி அமெரிக்க 'டைம்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் கூறியிருந்தது தெரிந்ததே.

பேச்சுக்கள் தோல்வி அடைந்தால் யாழ் குடாநாடு மீது முழு அளவிலான இராணுவ நடவடிக்கையை அரசு எடுக்கும் என்றும் அமைச்சர் அத்துலத்முதலி அப் பேட்டியில் வலியுறுத்தி இருந்ததும் குறிப்பிடத்தக்கது. (உ-ஐ-எ)

### தெற்கில் படையினர் உஷார் நிலையில்

கொழும்பு, ஏப். 17

தென் இலங்கையில் பாதுகாப்புப் படைகள் உஷார்படுத்தப்பட்டு உள்ளன.

கண்டி, பல்லேகல இராணுவமுகாமிலிருந்து இனந்தெரியாத நபர்கள் 19 இயந்திர துப்பாக்கிகளை கொள்ளையடித்துக் கொண்டுசென்ற சம்பவத்தைத் தொடர்ந்தே பாதுகாப்புப் படைகள் உஷார் படுத்தப்பட்டுள்ளன. (உ-எ)

### சுபநேரம்

17-04-1987

வெள்ளிக்கிழமை

சுபநேரம்:-

6-04 முதல் 7-34 வரை

ராகுகாலம்:-

10-34 முதல் 12-04வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

பெரிய வெள்ளி

### குரும்பசிட்டியில் இடம் பெயர்ந்தோர் வீடுகளைப்பார்வையிட அனுமதி

யாழ்ப்பாணம், ஏப். 16

குரும்பசிட்டியிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் தங்கள் கிராமத்துக்குச் சென்று வீடுகளைப் பார்வையிட இராணுவம் அனுமதி வழங்கியுள்ளது.

நாளை சனிக்கிழமை சம்பந்தப்பட்ட குடியிருப்பாளர்கள் இராணுவ அதிகாரிகள் தலைமையில் வீடுகளைச் சென்று பார்வையிட அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

மயிலிட்டி தெற்கு பிரசைகள் குழு, யாழ் அரச அதிபர் ஊடாக பலாலி முகாம் இராணுவ இணைப்பதிகாரிக்குச் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சென்ற 26ஆம் திகதி குரும்பசிட்டிக் கிராமத்தை இராணுவத்தினர் முற்றுகையிட்டதைத் தொடர்ந்து உடமைகளை எடுக்க முடியாத நிலையில் அப்பகுதி மக்கள் வெளியேறினர்.

இதனிடையில் நாளை வீடுகளை பார்வையிட இருக்கும் மக்களின் பெயர்ப்பட்டியலை மயிலிட்டி தெற்கு பிரசைகள் குழு தயாரித்து இருக்கிறது.

அப்பட்டியல் ஒரு குறிப்பிட்ட அடிப்படையில் தயாரிக்கப்படஇருப்பதால் பாதிக்கப்பட்டோர் இன்று வெ (4 ஆம் பக்கம் பார்க்க)

### இடம்பெயர்ந்துள்ள உள்ளூர் அகதிகளுக்கு பங்கீட்டு உணவு

யாழ்ப்பாணம், ஏப்.17

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட அசம்பாவிதங்களால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த உள்ளூர் அகதிகளுக்கு பங்கீட்டு உணவுப் பொருள்கள்வழங்குவதற்கு யாழ். அரச அதிபர் திரு. வி. எம் பஞ்சலிங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

புனர்வாழ்வு அமைச்சு, தொண்டர் ஸ்தாபனங்கள் ஆகியனமூலம் வழங்கப்படும் இந்த நிவாரண உதவி தற்காலிகமானது என்று அறிவிக்கப்படுகிறது.

தெல்லிப்பழை உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த கட்டுவன், மயிலிட்டி தெற்கு, குரும்பசிட்டி, மயிலிட்டி கரையோரம், ஊறணி, தையிட்டி, காங்கேசன்துறை, பலாலி, விமன்காமம் ஆகிய கிராமங்களில் இருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கே இந் நிவாரண உதவி வழங்கப்படும்.

இதுவரை விண்ணப்பங்களை அனுப்பத் தவறிய பாதிக்கப்பட்டோர் உடனடியாக தத்தமது பகுதி பிரசைகள் குழுக்கள், கிராம சேவையாளர் ஆகியோர் மூலம் தெல்லிப்பழை உதவி அரச அதிபர் ஊடாக விண்ணப்பங்களை யாழ். அரச அதிபருக்கு அனுப்பி வைக்கும்படி கோரப்பட்டுள்ளனர். (உ-எ)

### போராளிகளின் படகு மீது தாக்குதல்?

கொழும்பு, ஏப். 17

வடக்கு கடலோரத்தில் தமிழ் போராளிகளின் படகு ஒன்றை கடற்படையினர் நேற்று நிர்மூலமாக்கியிருப்பதாக ஸ்ரீலங்கா பாதுகாப்புப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

மன்னார் கோவிலங்கண்டியில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் 14 போராளிகள் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் ஆகாசவாணியின் கொழும்பு செய்தியாளரிடம் தெரிவித்ததாக அறிவிக்கப்படுகிறது. (உ)

## அமெரிக்கா- பாக்.- இலங்கை முக்கூட்டு பாதுகாப்பு ஒப்பந்தம்

### இந்திய பத்திரிகைகளின் சந்தேகத்துக்கு மறுப்பு

லண்டன், ஏப். 16

அமெரிக்கா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் சேர்ந்து இலங்கை முக்கூட்டு பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருப்பதாக இந்தியப் பத்திரிகைகள் சந்தேகம் கிளப்பியிருக்கின்றன.

இந்தியப் பத்திரிகைகளின் இந்தச் சந்தேகத்தை இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதுவர் முற்றாக மறுத்திருக்கிறார்.

அமெரிக்க விமானப் படை விமானங்களும், கடற்படைக் கப்பல்களும் அடிக்கடி இலங்கைக்கு வந்துபோகின்றன.

இது தவிர பாகிஸ்தானின் கடற்படை, விமானப்படை, இராணுவப் படை உயரதிகாரிகளும் அடிக்கடி கொழும்புக்கு வந்துபோகிறார்கள்

இது முக்கூட்டு பாதுகாப்பு ஒப்பந்தத்தை உணர்த்துவதாக இந்தியப் பத்திரிகைகள் சில கருத்துத் தெரிவித்தன.

இதனை மறுத்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர்-

இந்த ஆண்டில் அமெரிக்க கடற்படையின் 11 கப்பல்களே இலங்கைக்கு வந்தன அவற்றில் மூன்று மட்டுமே தரித்து நின்று சென்றன. ஏனையவை எரிபொருளை நிரப்பிக்கொண்டு சென்று விட்டன என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்க விமானப் படை விமானங்களும் இந்தக் காலத்தில் 7 தடவைகளே இலங்கை வந்து சென்றுள்ளன என்றும் அவர் கூறினார். (உ)

### சட்டசபை உறுப்பினரை பதவி நீக்கம் செய்தது சரி எனத் தீர்ப்பு

சென்னை, ஏப்ரல் 17

அரசியல் சாசனத்தின் ஒரு பகுதியை எரித்ததற்காக பத்து தி.மு.க எம். எல். ஏக்களை தமிழ்நாடு சட்ட சபை பதவி நீக்கம் செய்ததீர்மானம் செல்லுபடியாகும்.

-இப்படி சென்னை உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது

பதவிநீக்கம் செய்யப்பட்ட எம். எல் ஏக்கள் இடைத் தேர்தல்களில் போட்டியிடலாம் என்றும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அரசமைப்புக்கு விசுவாசம் தெரிவித்து பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்ட உறுதிமொழி, சம்பிரதாய பூர்வமானது ஒன்றல்ல.

அரசியல் சாசனத்தை எரித்தது அந்த உறுதி (4 ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளூர் குளிர்பானம் அருந்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப் 17

தமிழீழ மக்கள் சிறீலங்கா உற்பத்தி குளிர்பான வகைகளை தவிர்த்து உள்ளூர் குளிர்பான வகைகளை உபயோகிக்கும்படி தமிழீழ விடுதலைப் புலிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப்புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

விடுதலைப் போராட்டம் என்பது வெறுமனே ஆயுதப் போராட்டத்தினால் மட்டுமே வென்றடைந்துவிடக்கூடிய ஒன்றல்ல தமிழீழ நிர்மாணத்தில் அரசியல் சமூக பொருளாதார தன்னிறைவை அடையவேண்டியது இன்றியமையாததாகும்.

விடுதலைப் போராட்ட வளர்ச்சிப் போக்கில் பொருளாதார ரீதியாக எமது காலில் தங்கி நிற்கும் நிலையைத் தோற்றுவித்தல் அவசியமானது.

இந்த வகையில் உள்ளூர் உற்பத்திகளிலும் பாவனையிலும் ஈடுபடுவதுடன் அந்நிய பொருள்களை நிராகரிக்க வேண்டியது இன்று நம் முன் உள்ள முக்கிய கடமையாகும்.

—இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### பயணிகள் வாகனத்தை ஹெலி துரத்தியது

வல்லைவெளியில சம்பவம்

வல்லைவெளிப் பாலத்தினூடாக பயணிகள் சென்றுகொண்டிருந்த வாகனம் ஒன்றை ஹெலிக்கொப்டர் துரத்திச்சென்றது.

நேற்றுக் காலை பத்து மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

ஹெலிக்கொப்டர் துரத்த ஆரம்பித்த போது பயணிகள் பலத்த சத்தமிட்டு கத்தினர்.

லைகளையும் புடைவைகளையும் அசைத்துக் காட்டினர்.

அதன் மத்தியிலும் ஹெலிக்கொப்டர் வாகனச் சுற்றி துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டுப் பறந்துசென்றது. (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

★ இன்றைய சிறு விளம்பரங்கள் ★

**வகுப்புகள்**

A/L விஞ்ஞானம், தூய, பிரயோக கணிதம் நல்லையா. சனி, ஞாயிறு, மாலை 5 மணி. இரசாயனவியல் கணேஸ், வெள்ளி 4 மணி பௌதிகம்; மணியம், வெள்ளி 5 மணி; விலங்கியல்: செல்வநாயகம், சனி ஞாயிறு 3 மணி ரேயல் இன்ரிரியூட், கே. கே. எஸ் வீதி, இணுவில். (1204)


# இராணுவத் தீர்வை எதிர்த்து இம்முறை மே தினம்

## வடக்கில் பிரமாண்டமான ஊர்வலம் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 17

இராணுவத் தீர்வுக்கு எதிராக மாபெரும் மேதின ஊர்வலம் ஒன்றை நடத்த யாழ்ப்பாணத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) மத்திய குழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் திரு. கே. ஏ. சுப்பிரமணியம் விடுத்த அறிக்கை வருமாறு:-

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என வெறுமனே உச்சரித்துக் கொண்டு அரசும் அதன் தலைவர்களும் இராணுவத் தீர்வை நடைமுறைப் படுத்துவதன் மூலம் ஒரு தலைப்பட்சமான தமது முடிவுகளைத் தமிழ் பேசும் மக்களின் மீது திணிக்க முயலுகின்றனர்.

அரசின் இராணுவத் தீர்வு என்ற மோசமான இந்நிலையைச் சகல மக்களும் எதிர்த்து நிற்பது அவசியமாகும்.

அதேவேளை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய நியாயமான அரசியல் தீர்வை எதிர்வரும் மே தினத்தில் உழைக்கும் வர்க்கம் அணிதிரண்டு வற்புறுத்தவேண்டும்.

உழைக்கும் வர்க்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் சகல முற்போக்கு, ஜனநாயக, தொழிற்சங்க அமைப்புகளும் ஒரேகுரலில் இராணுவத்தீர்வை எதிர்த்தும் அரசியல் தீர்வை வற்புறுத்தியும் மேதின நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

உலகத் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரமான உரிமைத்தினம் மே தினமாகும்.

இன்று இலங்கையில் உழைக்கும் மக்கள் மோசமான பொருளாதாரச் சுரண்டலுக்கும் அரசியல் அடக்குமுறைகளுக்கும் ஆளாக்கப் பட்டு வருகின்றனர்.

வர்க்க ரீதியில் வளர்ந்துவரும் முரண்பாட்டைத் திசை திருப்பி தமது வர்க்கத்தின் தேவைகளை ஈடேற்றிக் கொள்ளவே தமிழ் மக்கள் மீதான கொடிய இராணுவ அடக்குமுறைகளை ஜே. ஆர். தலைமையிலான அரசு கட்டவிழ்த்துள்ளது.

இன ரீதியிலான இவ் இன ஒடுக்குமுறையையும் இராணுவ நடவடிக்கைகளையும் இலங்கையின் சகல உழைக்கும் மக்களும் உறுதியாக எதிர்த்து நிற்கவேண்டும்.

அதன் வெளிப்பாட்டை எதிர்வரும் மே தினத்தில் உழைக்கும் வர்க்கமும் அவர்களின் அமைப்புக்களும் ஐக்கியத்துடன் வெளிப்படுத்த வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் மே தினத்தை அரசின் இராணுவத் தீர்வை எதிர்த்தும், அரசியல் தீர்வை வற்புறுத்தியும் சக்திமிக்கதும் ஐக்கியமானதுமான ஊர்வலம், பொதுக் கூட்டத்தை நடத்த இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) ஏனைய இடதுசாரிக் கட்சிகளுக்கும் தொழிற் சங்கங்களுக்கும் அழைப்புவிடுகின்றது.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## பொருளாதார வளம் காண தொழில் பற்றிய அறிவு மிக அவசியம்

மானிப்பாய், ஏப். 17

மனிதன் பொருளாதார வளமுடையவனாக இருப்பதற்கு தொழில் ஒன்றை தேடிக் கொள்ள வேண்டியவனாகிறான். தொழிலை தேடிக் கொள்ள தொழில் பற்றிய அறிவு அடிப்படை செயல் முறைத் திறன், தொழில் பற்றிய நம் மனப்பாங்கு ஆகியன அவசியம்.

தொழில்நுட்பக் கல்வி அபிவிருத்தியின் அவசியம், திட்டமிடப்பட்ட பாடவிதானங்கள், நடைமுறைப்படுத்தல் சம்பந்தமான கருத்தரங்கில் பேசிய யாழ்ப்பாணம் தொழில் நுட்பப்பாடக் கல்வி அதிகாரி திரு சுப்பிரமணியம் இவ்வாறு கூறினார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பல தொழில் நுட்பபாட ஆசிரியர்கள் அதிபர்கள் கலந்து கொண்டனர்.

வட்டார கல்வி அதிகாரி திரு எஸ் தனஞ்செயன் பேசுகையில் காலத்துக்கு காலம் இதுபோன்ற நல்ல திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டாலும் நடைமுறையில் அவை சரிவரச் செயல் படுத்தப் படுவதில்லை.

சிறந்த பிரஜைகளையும் கல்வியையும் வளர்ப்பதில் அதிபர்கள், ஆசிரியர்கள் சிந்தித்து ஒன்றுபட்டு செயலாற்றவேண்டும் என்றார். (இ-90)

## குடும்ப உணர்வை உருவாக்கி வரும் கொத்தணி அமைப்பு முறை

கொடிகாமம், ஏப். 17

இப்போது அறிமுகப் படுத்த பட்டுள்ள பாடசாலைகளின் கொத்தணி அமைப்பு முறை ஒரு குடும்ப உணர்வை உருவாக்குகின்றது.

உசன் கொத்தணிப் பாடசாலைகளின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கிய வடமராட்சி நிலக் கல்விப் பணிப்பாளர் ஜனுப் எம் எம். மன்சூர் மேற்கண்டவாறு கூறினார்.

உசன். இராமநாதன் மகாவித்தியாலய மைதானத்தில் கொத்தணி அதிபர் திரு. கே. சிவநாத சுந்தரம் தலைமையில் போட்டி நடைபெற்றது.

யாழ் மாவட்ட விஞ்ஞானக் கல்வி அதிகாரி திருமதி புஷ்பா. கணேசலிங்கம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

வெற்றி பெற்றவர்களுக்கு ஜனுப் மன்சூர் பரிசில்களை வழங்கினார். போட்டி இடக்குநர் திரு. எஸ் குலசேகரம் நன்றி தெரிவித்தார். (இ-75)

## மக்கள் முகம்

### நெடுங்கேணி விளையாட்டு கழகம்

நெடுங்கேணி, ஏப். 17

நெடுங்கேணி சிவா நகர் என் சி விளையாட்டுக்கழகக் கூட்டம் நெடுங்கேணி பொது விளையாட்டு மைதானத்தில் திரு க. முருகையா தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத்தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- மா. தர்மலிங்கம், செயலாளர்:-சி. துரைராசசிங்கம், பொருளாளர்:- சி உதயபாலன், கணக்காய்வாளர்:- க முருகையா.

நிர்வாக சபை உறுப்பினர்கள் ஐந்து பேர் தெரிவு செய்யப்பட்டனர் தி சிறீஸ்கந்தராசா, வெலிங்டன் பாச்சேர், வசிங்டன் பரச்சோ எஸ். கண்ணன், எஸ் சதுனுசரன். (இ-108)

## ஆசிரியர் பற்றுக்குறை நீங்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

மானிப்பாய், ஏப் 17

யாழ் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் எல்லாவற்றிலும் ஆசிரியர் தளபாடப் பற்றுக் குறைகள் உண்டு. இவற்றைப் பெற்றோர் ஆசிரியர் நலன்விரும்பிகள் ஒத்துழைப்புடன் நீக்கிக் கொள்ள முயலவேண்டும்.

இணுவில் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது

தலைமைவகித்த பாடசாலை அதிபர் திரு எஸ் சோதிப்பெருமாள் இவ்வாறு கூறினார்.

ஏராளமான குடும்பப் பெண்கள் சமூகம் தந்திருந்த இக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் எமது வட்டாரத்தில் ஒன்று இரண்டு ஆசிரியர்களை மட்டும் கொண்டு 5ஆம் வகுப்பு வரை நடைபெறும் பாடசாலைகளும் உள்ளன.

இவற்றின் ஆசிரியர் பற்றுக்குறையை அயல் பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள் நிறைவு செய்ய உதவவேண்டும் என்றார்.

இணுவில் கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் திரு. சி சண்முகலிங்கம், திரு ஆ மயில்வாகனம், திரு ஆ திவிஜயநாதன், திரு என். இக்னேயம்பலம் ஆகியோரும் உரையாற்றினர், (இ-90)

## பாடசாலை வளர்ச்சி அதிபரின் கையில்

மானிப்பாய், ஏப் 17

இராமப்புறப் பாடசாலைகளின் வளர்ச்சி அப் பாடசாலை அதிபரின் நிர்வாகத் திறமையிலேயே தங்கியுள்ளது.

சங்குவேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்தப் பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் உரையாற்றிய மானிப்பாய் இந்து இளைஞர் சங்கத் தலைவர் திரு க பூதத்தம்பி இவ்வாறு கூறினார்.

பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. என் சண்முகலிங்கம் கூட்டத்துக்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், ஆசிரியர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பினூடாகவே பாடசாலையை நல்லமுறையில் என்னால் நிர்வகிக்க முடிகிறது தொடர்ந்தும் அவர்கள் எனக்கு பூரண ஒத்துழைப்புத் தர வேண்டும் என்று கூறினார். (இ-90)

சுன்னாகம்

## ஸ்ரேமன் கத்தோலிக்க பாடசாலை அபிவிருத்தி வேலைகளுக்கு நிதி உதவி

சுன்னாகம், ஏப். 17

சுன்னாகம் ஸ்ரேமன் கத்தோலிக்க பாடசாலையின் திருத்த வேலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை நான் ஏற்கிறேன் பணம் கிடைத்ததும் அதற்குரிய ஒழுங்குகளை செய்து தருவேன்.

யாழ் மாவட்ட கல்விப்பணிப்பாளர் ஜனுப் எம் எம் மன்சூர் இவ்வாறு கூறினார்.

மேற்படி பாடசாலையின் இன்றைய தேவைகள் குறித்து கல்விப் பணிப்பாளரை சந்தித்து உரையாடிய குழுவிடம் பணிப்பாளர் மேற்கண்ட உறுதிமொழியை வழங்கினார்.

பாடசாலை அதிபர் திரு. ஏ பதுவைநாயகம் பாடசாலை அபிவிருத்திச் சபை செயலாளர் திரு. ஏ வி. ஞானரத்தினம் அம்பேத்கார் சனசமூக நிலையத்தலைவர் திரு சபா புஷ்பநாதன் ஆகியோர் பாடசாலையின் அபிவிருத்திக்கு தேவையான பல விடயங்கள் குறித்து கல்விப் பணிப்பாளருடன் கலந்துரையாடினர்.

ஆசிரியர் பற்றுக்குறை கட்டட பராமரிப்பு-தளபாட வசதிகள் உட்பட [illegible] இணக்கம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-87)


**65 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றிநவிலலும்**

அன்னை மடியில் 17-02-71

★

இறைவன் அடியில் 14-02-87



உடுவில் மகளிர் பாடசாலை 10ஆம் தர மாணவி

செல்வி பத்ம இராசன் திவ்விய சொரூபினி (திவ்வியா, செல்வம்)

14-2-87 இல் அகாலமரணம் எய்திய செல்வி பத்ம இராசன் திவ்விய சொரூபினியின் இறுதி சடங்குகளில் கலந்துகொண்டவர்க்கும் பழைய புதிய பாடசாலை ஆசிரியர், மாணவர்க்கும், இரங்கல் செய்தி அனுப்பிய அனைவர்க்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

20-4-87 ஆம் திகதி திங்கட்கிழமை கைதடி தெற்கில் உள்ள எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியையில் கலந்தும் அன்றைய தினம் நடைபெறும் மகேசுர பூசையிலும் பங்குபற்றுமாறு உறவினர், நண்பர்கள் அன்னார் கல்வி பயின்ற பாடசாலை ஆசிரியர்கள் மாணவிகள் எல்லோரையும் வேண்டிக் கொள்கிறோம்.

திரு திருமதி ப. பத்மஇராசன் (பெற்றோர்)

திரு. திருமதி பொ. பத்மநாதன் (பேரன், பேத்தி)

திரு. ப. பாலச்சந்திரன் (சிறிய தகப்பன்)

"மாணுர் வளவு" கைதடி தெற்கு. கைதடி. (1208)

நியூ ஸரியா சிப்பிங், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## விளையாட்டரங்கு

### ஜொனியன்ஸ் அணி 3 விக்கெட்டுக்களால் வெற்றி

யாழ்ப்பாணம், ஏப். 17

யாழ்ப்பாணம் சென்றலைட் விளையாட்டுக் கழக அணிக்கெதிரான 50 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் யாழ் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 3 விக்கெட்டுக்களினால் வெற்றியீட்டியது.

சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட் அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழப்பிற்கு 183 ஓட்டங்களைப் பெற்றது

சண்முகலிங்கம் 51, புரட்சிதாசன் 35, ராஜீவன் 30, விக்னேஸ்வரன் 26 ஓட்டங்களைப் பெற்றனர்.

சி. சூரியகுமார் 2 விக்கெட்டுக்களையும் எஸ். டி. குலநாதன், ரி சஞ்சீவன் பி ஜெயக்குமார், ஆர். மகிந்தா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் அணி 38 3 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றிக்குத் தேவையான 184 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது

ஏ வாகீசன் 3 சிக்சர்கள், 5 'பவுண்டரிகள்' அடங்கிய 53 ஓட்டங்களையும், ரி. சஞ்சீவன் 34, பஞ்சன் 35 விக்கெட்டுகள் 24 ஓட்டங்களையும் பெற்றனர்

ராஜீவன் 3 விக்கெட்டுக்களையும், விஜயநாதன், சண்முகலிங்கம் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர் (உ-7)

### ஐடியல் அணி சாதனை

யாழ்ப்பாணம், ஏப் 17

சென்றலைட் வெற்றிக் கேடயத்துக்காக 6 ஆவது ஆண்டாக நடைபெறும் மென்பந்து கிரிக்கெட் போட்டியில் ஐடியல் விளையாட்டுக் கழக அணியினர் புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டப் பட்டுள்ளது

வைற் கோல்ட் ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக அணியை 12 ஓட்டங்களில் சகல விக்கெட்டுக்களையும் கைப்பற்றிய ஐடியல் விளையாட்டுக் கழகம் இச்சாதனையை புரிந்துள்ளது

இதற்கு முன்னர். அரியாலை ஐக்கிய கழகம், சுவிஸ்லாந்து ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை 16 ஓட்டங்களில் ஆட்டமிழக்கச் செய்து சாதனை புரிந்திருந்தது.

சென்றலைட் விளையாட்டுக் கழகத்தினால் இந்த சுற்றுப் போட்டி நடத்தப்பட்டு வருகின்றது. (இ-7)

## வீடமைப்பு நிவாரண வேலைகளில் சேவாச்சிரமம்

பருத்தித்துறை, ஏப். 17

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் பாதிக்கப்பட்டோர்களுக்கான வீடமைப்பு நிவாரண வேலைகள் ஆரம்பித்துள்ளது.

அண்மையில் யாழ். பெரியாஸ்பத்திரியில் இராணுவத்தினரின் ஷெல் தாக்குதல்களில் பலியான மந்திகை சரவெட்டியைச் சேர்ந்த திரு. இ. செந்திவேல் என்பவரின் குடும்பத்திற்கு முதன் முதலாக சிறு வீடு அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது

இவ்வீட்டை அமைப்பதற்கு முதல்கட்ட நிதியாக ரூபா ஐயாயிரத்தை பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி இத்ருபானந்தா திருமதி செ. இரத்தினத்திடம் கையளித்தார். (இ-118)

## ஐக்கிய நாணய சங்கங்கள் மக்களின் வாழ்வோடு நெருக்கமானவை

சுன்னாகம், ஏப் 17

ஐக்கிய நாணய சங்கங்கள் மக்களின் வாழ்வோடு நெருக்கமானவை.

இப்படிச் சொன்னார், யாழ் சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. என். ஞானப்பிரகாசம்

ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயகர் ஐக்கிய நாணய சங்க ஆண்டுப் பொதுக் கூட்டம் அண்மையில் திரு க. மகாதேவன் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் அகில இலங்கை ஐக்கிய நாணய சங்கங்களின் சம்மேளனப் பிரதிநிதி செல்வி மு ராஜனி, கோண்டைக்காடு நமசிவாய ஐக்கிய நாணய சங்கப் பிரதிநிதி திரு வீ, விமலாம்பிகை பாகன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசினர். (இ-எ-87)

## சனசமூகநிலைய உதவி கோரப்படுகிறது

யாழ்ப்பாணம், ஏப். 17

உடுவில் உப அபிவிருத்திசபையின் கீழுள்ள சட்டவிரோத மின்பாவனையை கட்டுப்படுத்த அந்தப்பகுதியில் உள்ள சனசமூக நிலையங்களின் உதவியை எதிர்பார்க்கிறோம்.

இவ்வாறு உடுவில் உப அபிவிருத்திசபை அதிகாரியான ஆர் கணேஸ்வரன் தெரிவித்தார்

மேலும் சட்டவிரோத மின்பாவனை தொடருமானால் உடுவில் பகுதியில் உள்ள வீடுகள் அனைத்தும் மின்சாரத்தை இழக்க நேரிடும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## வெற்றிடம் இன்னும் நிரப்பப்படவில்லை

வட்டுக்கோட்டை, ஏப். 17

வட்டுக்கோட்டைப் பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பதவிக்கான வெற்றிடம் கடந்த இரண்டு மாதங்களாக நிரப்பப்படாதிருப்பதனால் இப்பிரிவு பொது மக்கள் பெரிதும் கஷ்டப்பட்டு வருகின்றனர்.

வட்டுக்கோட்டைப் பிரிவு பொதுச் சுகாதாரப்பரிசோதகர் திரு எஸ் கருணைநாதன் சேவையிலிருந்து ஓய்வு பெற்றதை அடுத்தே இப்பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டுள்ளது (இ-161)

## பாராட்டு விழா

மண்டைதீவு, ஏப். 17

வேலணை வட்டாரக் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றி பதவி உயர்வுடன் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள திரு, பொன். கணேசனுக்கு சேவை நலன் பாராட்டுவிழா அண்மையில் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. (இ-88)

## இலவச சேவை

பருத்தித்துறை, ஏப், 17

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம இலவச வைத்திய சேவையில் நெல்லியடி-கரவெட்டி இலவச வைத்திய கலாநிதி என். சுப்பிரமணியம் கலந்து கொண்டு இலவச சேவையாற்றி வருகின்றார். (இ-118)

## அபிவிருத்திச்சங்க கூட்டம்

மண்டைதீவு, ஏப். 17

மண்டைதீவு கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டம் இம்மாதம் 27ஆம் திகதி திரு க ஜெயநுணதிலகம் தலைமையில் நடைபெறவிருக்கின்றது. (உ-88)

## செய்திக்கொத்து

### விற்பனவுச் சங்கம்

கொடிகாமம், ஏப். 17

தென்மராட்சி கிழக்கு தெங்கு, பனம்பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கம், கொடிகாமத்தில் தெங்கு பனம்பொருள் விற்பனை நிலையம் ஒன்றைத் திறந்து வைத்தது

ஆசிரியர் திரு ஐ. சின்னையா மங்கல விளக்கேற்ற இளைப்பாறிய அதிபர் பண்டிதர் திரு பொ. கந்தையனார் நிலையத்தைத் திறந்து வைத்தார். (இ-75)

### ஓய்வு பெற்றார்

அனலைதீவு, ஏப். 17

அக்கிப்பிட்டி சுகாதாரப் பரிசோதகர் திரு எஸ். இவசுப்பிரமணியம் 38 வருட சேவையின்பின் ஓய்வு பெற்றார் (இ-18)

### கலை, கலாசார பேரவை

சாவகச்சேரி, ஏப்.17

சாவகச்சேரியில் கலை கலாசாரப் பேரவை ஒன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது

இதுதொடர்பான கூட்டம் [illegible] ஆசிரியர் திரு. சி. கனகசபாபதி தலைமையில் நடைபெற்றது

இப்பேரவையின் முதல் கலைவிழா மே மாதம் 12ஆம் திகதி நடைபெறும். (இ-81)

### பனைவளம்பற்றி கருத்தரங்கு

மண்டைதீவு, ஏப் 17

தீவுப்பகுதிகளில் நடைபெற்றுவரும் பனை அபிவிருத்திக் கருத்தரங்கின் தொடரில் எதிர்வரும் 22ஆம் திகதி தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் பனைவள அபிவிருத்தி சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று நடைபெறும். (இ-88)

### இடமாற்றங்கள்

அனலைதீவு, ஏப் 17

வேலணைச் சுகாதாரப் பரிசோதகர் திரு எம். விநாயகசேகரம் கைதடிக்கும், கைதடி சுகாதாரப் பரிசோதகர் திரு. ஏ. செல்லையா நயினாதீவுக்கும், நயினாதீவு சுகாதாரப் பரிசோதகர் திரு. கே. ராஜ்குமார் அக்கிப்பிட்டிக்கும் இடமாற்றம் பெற்றுள்ளனர். (இ-18)


**தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத்தின் ஆதரவின் கீழ்**

**A.A.T. வகுப்புக்கள் ஆரம்பம்**

அடிப்படைத் தகைமைகள்:

1. 21 வயதுக்குட்பட்டவர்கள்
2. க. பொ. த. சாதாரண தரம் சித்தி பெற்றிருப்பதுடன் கட்டாயமாக ஆங்கிலம். கணிதம் / எண்கணிதம் இரண்டிலும் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
3. 21 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப் பயிற்சியை பெற விரும்பின் ஏதாவது ஒரு ஸ்தாபனத்தில் தொழில் புரிபவராயின் அந்த ஸ்தாபனத்தின் வேலை கொள்வோரிடமிருந்து ஆங்கில தலைமை உடையவரென சிபார்சு பெறப்படல் வேண்டும்.

மாணவர் ஆரம்ப நிலையில் பயிற்றப் படுவர்.

மாணவர் விருப்பத்திற்கேற்ப வேறு நிலைகளும் தொடரப்படும்.

இவற்றிற்கு தொடர்புடைய பாடங்கள்

1. Basic Accounting
2. Commuuication
3. Business Administration
4. Numaracy and Statistics

ஆண், பெண் இருபாலாரும் 25-4-87 ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும். கட்டணம், ஏனைய விபரங்கள் பற்றிய தகவல்கள் சங்கத்தில் அறிந்து கொள்ளலாம்.

தலைவர்
தெல்லிப்பழை ப. நோ கூ. ச.
தெல்லிப்பழை

87-04-10 (2833)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

கீழ் படியத் தெரிந்தவனே ஆளவல்லவனாகின்றான்.

-- சுவாமி சிற்பவானந்தா

உதயன்

இல. 18, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24808 / 23078

17-04-1987 த.பெ.இல. 88

## யாருக்கு அந்த எச்சரிக்கை?

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் நிதி அமைச்சு கடந்த வார இறுதியில் வெளியிட்ட அறிக்கை பெரும் உள்நோக்கம் உடையதாக விளங்குகின்றது.

சர்வதேச நிதி நிறுவனத்திடம் இருந்து எவ்வாறேனும், எவ்வழியாலேனும் இவ்வருடம் 650 கோடி ரூபாவைக் கடனாகப் பெற வேண்டும் என்று நிதி அமைச்சு கணக்குப் போட்டிருக்கிறது.

அந்த தொகையைப் பெற்றுவிட வேண்டும் என்ற ஆவலில் பறந்து கொண்டிருக்கிறார் நிதி மந்திரி திரு. ரொனி டி மெல். கடன் வழங்க வற்புறுத்தும் விதத்தில் அவர் உலக வங்கி, ச.நி. நிறுவனம் ஆகியவற்றின் உயர் அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தியிருக்கிறார்.

ஆனால் கேட்கும் அந்தளவு கடனும் கிடைக்குமா என்பதில் நிதி அமைச்சுக்குச் சந்தேகம் எழுந்திருக்க வேண்டும். அதன் நிமித்தமே கடந்த வார அறிக்கையை அது வெளியிட்டிருக்கிறது. பிரகிருதமான அறிக்கை இரண்டு சாராருக்கு எச்சரிக்கை விடுவதாக அமைந்திருப்பது புலனாகிறது.

கடன் கிடையாது போனால் மீண்டும் கட்டுப்பாடு, தட்டுப்பாடு யுகம் வரும். கியூவில் நின்று பொருட்களை வாங்கும் முறை வரும். அதாவது பத்து வருடங்களுக்கு முன்னர் சிறிலங்கா ஆட்சியில் பட்ட கஷ்டங்களை மீண்டும் அனுபவிக்க நேரிடும். இவ்வாறு நிதி அமைச்சு நாட்டு மக்களுக்கு முன்னெச்சரிக்கை விடுவதாக அந்த அறிக்கை அமைகிறது.

உலக வங்கி, சர்வதேச நிதி நிறுவனம் ஆகியவற்றுக்கும் அந்த அறிக்கை எச்சரிக்கை விடுவதாக உள்ளது.

சிறிலங்கா ஆட்சிக்காலத்தில் இருந்த இறக்குமதிக் கட்டுப்பாட்டை நீக்கி, தாராள பொருளாதாரக் கொள்கையை ஐ.தே.க. அரசு அறிமுகப்படுத்தியது. அதற்குப் பின்னணியில் நின்று முழு ஆதரவு வழங்கியது உலக வங்கி. தாராள இறக்குமதிக் கொள்கையை அமுல் செய்யுமாறு தூண்டுதல் அளித்ததும் உலக வங்கியே.

தாராள இறக்குமதிக் கொள்கையை அமுல் செய்தால்தான் கடன் தரப்படும் என்று உலக வங்கி நிபந்தனை விதித்ததாகவும், அதற்கு அரசு உடன்பட்டதாகவும் சுமார் எட்டு ஒன்பது வருடங்களுக்கு முன்னர் பொருளாதார வட்டாரங்களில் பேசப்பட்டது.

பாவம் உலக வங்கி! தாராள இறக்குமதி அமுலுக்கு பதிலுபகாரமாகப் பத்து வருடங்களாக, எல்லை இல்லாத விதத்தில் ஸ்ரீலங்காவுக்குக் கடனை அழுது தீர்க்க வேண்டியதாயிற்று. அதனால் இப்போது கேட்கும் தொகை முழுவதையும் கொடுக்கப் பின்னிற்கிறது போலும். அதன் பின்னடிப்பை முறியடிப்பதற்கான ஓர் எச்சரிக்கையே மீண்டும் இறக்குமதிக் கட்டுப்பாட்டை அமுலுக்குக் கொண்டுவர வேண்டியிருக்கும் என்ற அறிக்கை!

சர்வதேச நிதி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மைக்கல் கம்டீசஸ் பாதுகாப்புச் செலவினம் குறித்துக் குறை கூறியிருப்பதும் ஸ்ரீலங்கா அரசுக்கு-நிதி அமைச்சுக்கு- உறைத்திருக்க வேண்டும்.

இனப்பிரச்சினை தீர்வில்லாமல் நீண்டு கொண்டே போகிறது. அதனால் ஸ்ரீலங்காவின் பாதுகாப்புச் செலவினம் உயர்ந்து கொண்டே செல்கிறது. விளைவு நாட்டின் பொருளாதாரம் தொடர்ந்து பாதிக்கப்படுகிறது. இது எமக்கு பெரும் கவலையைத் தருகிறது. இவ்வாறு கம்டீசஸ் தெரிவித்திருக்கிறார்.

உங்களுக்குக் கடனைத் தொடர்ந்து தந்து கொண்டிருந்தால் நீங்கள் எப்படி அதனைத் திருப்பச் செலுத்தப் போகிறீர்கள்? பாதுகாப்பு என்று அநியாயமாகச் செலவு செய்கிறீர்களே! என்ற அர்த்தப்பட்ட கம்டீசஸ் கூறியிருக்கிறார்.

அதனைத் தாங்கிக் கொள்ள முடியாத வேதனையில்தான் நிதி அமைச்சின் எச்சரிக்கை அறிக்கை வந்திருக்க வேண்டும்.

அபிவிருத்திக்கும், பொருளாதாரத் தேவைகளுக்கும் என உலக வங்கி, ச.நி. நிறுவனம் மற்றும் வெளிநாடுகளிடம் இருந்து பெறப்படும் பணமே பாதுகாப்பு என்ற பேரில் நாட்டின் சொந்த மக்களைக் கொல்வதற்குச் செலவு செய்யப்படுகிறது. சொந்தமக்களை கொல்வதற்காகப் பாதுகாப்பு நிதியை அதிகரிக்கும் ஸ்ரீலங்காவைத் தவிர உலகில் வேறு எந்த நாடும் அந்த ரகத்தில் இருக்க முடியாது. அதுவும் வெளியாரிடம் கடன் வாங்கிச் சொந்த மக்களைக் கொல்லும் பாவத்தை ஸ்ரீலங்கா அரசு செய்து வருகிறது.

எனவே ஸ்ரீலங்காவுக்கு கடன் வழங்கும் வெளிநாடுகள் சர்வதேச நிதி நிறுவனங்கள் தமது கடன் பணம் அல்லது உதவிப் பணம் பாவத்திற்கே பயன்படுத்தப்பட்டு வருவதை உணர வேண்டும்.

திரு கம்டீசஸ் போன்று உண்மை நிலையை உணர வேண்டும். ஸ்ரீலங்காவுக்கான உதவிகளை நிறுத்த வேண்டும். அப்போது தான் தென்னிலங்கை மக்களுக்கும் நிலைமை நிதர்சனமாகத் தெரியும். அப்போதாவது தமிழர்களைத் தாக்குவதை நிறுத்துமாறு அவர்கள் அரசை வற்புறுத்துகிறார்களோ என்று பார்க்கலாம்.

குறுகியதூர ஏவுகணைத் தடை:

# அமெரிக்க -- ரஷ்ய உடன்பாடு சாத்தியம்

லண்டன், ஏப்.16

குறுகிய தூர அணு ஏவுகணைகளைக்குறைப்புச் சம்பந்தமாக ஒரு உடன்பாடு ஏற்படும் சாத்தியம் அதிகரித்து இருப்பதாக அமெரிக்க ரஷ்யத் தலைவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸ் மாஸ்கோவில் ரஷ்யத் தலைவர்களுடன் இரண்டு நாட்கள் நடத்திய பேச்சுக்களின் முடிவில் இந்த நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து இந்த ஆண்டின் இறுதியில் றேகன்– கோர்பசேவ் உச்சிமாநாடு வாஷிங்டனில் நடைபெறும் என்பதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்து இருப்பதாக பி.பி.சி. வானொலி நேற்றுத் தெரிவித்தது.

அமெரிக்கக் காங்கிரஸ் உறுப்பினர்கள் குழு ஒன்றுடன் உரையாடலையில்,

'குறுகிய தூர அணு ஏவுகணைகளை ஐரோப்பாவில் இருந்து அகற்றுவது சம்பந்தமான உடன்பாடு ஒன்று உருவாகும் காலம் வெகுதூரத்தில் இல்லை'- என்று திரு. கோர்பசேவ் தெரிவித்தார்.

இதனிடையில் கலிபோர்னிய விடுமுறை விடுதியில் வைத்து அதிபர் றேகன் பி.பி.சிக்கு பேட்டி அளித்தார்.

'மாஸ்கோ பேச்சுக்களின் முடிவுகள் மகிழ்ச்சியளிப்பதாக உள்ளன'- என்று அதிபர் றேகன் அப்போது சொன்னார்.

இதனிடையில் மாஸ்கோ பேச்சுக்கள் பற்றி நேட்டோ நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுக்கு அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸ் விளக்கம் அளித்து வருகின்றார்.

திரு ஷுல்ட்ஸ் பிரஸல்ஸில் தங்கியிருந்து இதில் ஈடுபட்டுள்ளார். (இ-எ)

வெளி உலகில்

## எதிர்கட்சி எம்.பி லோக சபையிலிருந்து வெளியேற்றப்பட்டார்

புதுடில்லி, ஏப் 16

ஊழல் நடவடிக்கையில் இந்தியப் பிரதமரும் ஈடுபட்டிருக்கிறார் என்று குற்றம் சுமத்திய எதிர்க்கட்சி எம்.பி நாடாளுமன்றத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

இந்திய நாடாளுமன்றத்தின் நேற்றைய கூட்டத்தில் இச்சம்பவம் இடம் பெற்றது.

பாதுகாப்பு அமைச்சர் பதவியில் இருந்து திரு.வி.பி சிங் ராஜினாமாச் செய்தது தொடர்பான விவாதத்தின் போது இந்த நிகழ்ச்சி இடம் பெற்றது.

திரு. சந்திர யாதப் என்றஎதிர்க்கட்சியினரே பிரதமர் மீதான ஊழல் குற்றச்சாட்டை எழுப்பியவர்.

கூட்டத்துக்குத் தலைமை வகித்த உபசபாநாயகர் திரு வி தம்பித்துரை,சம்பந்தப்பட்ட உறுப்பினரைப் பார்த்து குற்றச்சாட்டை வாபஸ் வாங்கும்படி கேட்டுக் கொண்டார்.

அதற்கு உறுப்பினர் மறுத்ததுடன் திரும்பவும் அதே குற்றச்சாட்டை சுமத்தினார்.

இதைத் தொடர்ந்து அவர் சபையில் இருந்து வெளியேற்றப்பட்டார். (உ-எ)

## இணக்கம் ஏற்படுத்த முயற்சி

நிகோஷியா, ஏப். 16

பலஸ்தீன விடுதலை இயக்கத்தில் உள்ள மூன்று பெரிய போட்டிப் பிரிவுகளுக்கு இடையே இணக்கம் ஒன்றை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

போட்டிக் குழுக்களிடையே நான்கு ஆண்டு காலமாக கருத்து வேற்றுமை நிலவுகின்றது.

அண்மையில் போட்டிக் குழுக்களின் பிரதிநிதிகள் அல்ஜீரியாவில் கூடி பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

பலஸ்தீன தேசியக் கவுன்சில் இம்மாதம் 20ஆம் திகதி அல்ஜியர்ஸில் கூடி, மோதலை முடிவுக்குக் கொண்டு வருவது பற்றி இறுதி முடிவு எடுக்க உள்ளது. (இ-எ)

## குடியரசு வேட்பாளராக முயற்சி

வாஷிங்டன், ஏப் 16

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளராக நியமனம் பெற திரு ஜாக் ஹெம்ப் என்பவர் முயற்சிக்கிறார்.

நியூயோர்க் மாநிலத்தில் பவ்வலோ என்னும் இடத்தைச் சேர்ந்தவர் இவர்.

51 வயதான இவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் 'றேகன் புரட்சி'யை, தவறுகளைத் திருத்தித் தொடர்ந்து செயற்படுத்தப் போவதாக அறிவித்திருக்கிறார். (உ-எ)

## மனைவியின் காதைக் கடித்த கணவன்!

ஜகார்த்தா, ஏப்ரல் 16

மனைவியின் காதைக் கடித்த கணவனுக்கு பத்து மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

வழக்கு விசாரணையில் சாட்சியத் தடயப் பொருளாகச் சமர்ப்பிக்கப்பட்ட கடித்து எடுக்கப்பட்ட காதின் துண்டு, விசாரணை முடிவில் மனைவியிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது.

மேற்கு ஜாவாவில் பாண்டுங்கில் இச்சம்பவம் இடம்பெற்றது.

கணவனின் பெயர் செபினல் ஆரிலன், வயது 36

இன்னொரு ஆணுடன் தனது 27 வயது மனைவி சிகி கஷேஷி பேசிக் கொண்டிருந்ததைக் கணவன் கண்டான்.

ஆத்திரத்தில் மனைவியின் இடது காதைக் கடித்துவிட்டான். மனைவியின் மூக்கையும் கடிக்க கணவன் முற்பட்டான் ஆனால் மனைவி தப்பி ஓடிவிட்டாள்!

இப்படி நீதிமன்றத்தில் சொல்லப்பட்டது (இ-எ)

## சஞ்சீவிரெட்டியை கௌரவிக்கும் விழாவில் ஷெயில் சிங் பிரதம அதிதி

புதுடில்லி, ஏப் 16

முன்னாள் ஜனாதிபதி நீலம் சஞ்சீவிரெட்டியைக் கௌரவிக்கும் விழாவிற்கு பிரதம அதிதியாக தற்போதைய ஜனாதிபதி ஷெயில்சிங் கலந்துகொள்ள இருக்கிறார்.

இம்மாதம் 25 ஆம் திகதி ஆந்திராவில் நடைபெறவுள்ள இவ்விழாவுக்கு ஆந்திர மாநில முதல்வர் என் டி ராமராவ் தலைமை வகிப்பார்.

ஆந்திர கழகம் தனது பொன் விழாவை ஒட்டி ஆந்திரப் பிரமுகர்களைக் கௌரவிக்க உள்ளது.

அப்பட்டியலில் முன்னாள் ஜனாதிபதி சஞ்சீவி ரெட்டி இடம் பெறுகிறார்.

ஏனைய பிரமுகர்கள் வருமாறு:

1. மணிப்பூர் கவர்னர் கே. வி கிருஷ்ணராவ்.
2. பேராசிரியர் என். ஜி. ரங்கா.
3. நடன தாரகை செல்வி யாமினி கிருஷ்ணமூர்த்தி.
4. விஞ்ஞானி பானு பிரசாத்
5. கைத்தொழில் அதிபர் ஹரிச்சந்திர பிரசாத்,
6. நடிகர் நாகேஸ்வர ராவ்
7. நடிகர் ஜக்கையா.
8. நடிகை பானுமதி

(இ-எ)

# பெரிய வெள்ளி இன்று: அது கடவுளின் நாள்

பெரிய வெள்ளிக்கிழமை கிறிஸ்தவர்களுக்கு ஒரு முக்கியநாள்.

உலகம் அனைத்திலுமுள்ள கிறிஸ்தவர்கள் இந்நாளில் சிறப்பு ஆராதனைகளை ஏறெடுத்து, தகுந்த முறையில் இதனை அனுசரிப்பார்கள். கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல, உலகிற்கே வாழ்வளித்த புனித நாள் இது.

### இறைவனின் திருநாள்

இயேசுபெருமான் சிலுவையில் அறையப்பட்ட நாளை 'பெரிய வெள்ளி' என அழைக்கின்றோம். ஆங்கிலத்தில் இந்நாளுக்கு வழங்கப்பட்ட பெயர்- நல்ல வெள்ளி' (Good Friday)

ஆங்கிலத்தில் 'நல்லது' (Good) என்னும் சொல் நன்மையானவைகளுக்குக் காரணரான இறைவன் (God) என்ற சொல்லிலிருந்து பிறந்தது.

ஆகவே, இந்நாள் 'பெரிய நாள்' அது 'கடவுளின் நாள்' எனக் கருதப்படுகின்றது.

கிறிஸ்துபிரானை சிலுவையில் அறைந்த நாளை, 'நல்ல நாள்' அல்லது 'இறைவனின் நாள்' எனலாமா? இவ்வுலகில் வாழ்ந்த மகாத்மாக்களுள், இயேசுபிரான் - தன் நிகரற்றவர், தூய்மையானவர், மக்கள் நலனில் உண்மையான கரிசனை கொண்டு அவர்கள் துயரத்

அருள்திரு டி ஆர். அம்பலவாணர்

துடைத்த அன்பர், தெய்வத் திருமைந்தன், இறைவனுக்கு நமக்கு வெளிப்படுத்திய சிலுவையின் நாதன்-

அவர் தம்மை வெறுமையாக்கிக் கொண்டு அடிமையின் தன்மையை ஏற்று மனிதனைப் போலானார்; மனித உருவத்தில் காணப்பட்டு தம்மைத் தாழ்த்தினார் கீழ்ப்படிதல் உள்ளவராய்நடந்து, மரணத்தை ஏற்றார்-அதுவும் சிலுவை மரணத்தை ஏற்றார்'- (பிலிப்பியர். 2:7,8)

இயேசுபிரானில் கடவுளின் உருவைக் குறிப்பாகக் கண்ட நாள்தான் 'பெரிய வெள்ளி'- கடவுளின் நாள்?

### பாவிகளின் நேசன்

இயேசு பிரானின் காலத்தில் வாழ்ந்த தீவிர சமயவாதிகளான பரிசேயர், அவரை வெறுத்தார்கள். அவர் ஆற்றிய பணிகளில் குற்றம் கண்டனர். 'ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் நண்பன்' (லூ 7:34) என அவரை இகழ்ந்தனர்.

இக்கூற்று, இகழ்ச்சியாகக் கருதப்பட்டாலும், நாம் அவரை இன்னும் அதிகமாக நேசிக்கத் தூண்டுகிறது.

இயேசுபிரான் பாவிகளின் நேசராய்ச் செயற்படாவிடில், நமது கதி என்னவாகும்?

'பாவிகளை மீட்கவே கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்'-(1 தீமோ 1:15)

மேலும் இயேசுபிரான் சிலுவையில் தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்ட சமயத் தீவிரவாதிகள் 'மற்றவர்களைக் காப்பாற்றினான். தன்னையே காப்பாற்றிக் கொள்ளட்டும்' (லூ 23:35) என்று பரிகாசம் செய்தனர்.

ஆம் எம்பெருமான் தன் உயிரைப் பேணிக் காப்பதில் நாட்டங்கொள்ளாமல், பாவிகளை அழிவிலிருந்து மீட்பதற்காகத் தம்முயிரையே கொடுக்க முன்வந்தார்.

இவர் சிலுவையில் காட்டிய அன்புக்கு எல்லையில்லை. இன்றும் விசுவாசத்தோடு அவரை ஏற்பவருக்கு மீட்பு கிடைப்பது நிச்சயம்.

இதுவே சிலுவையில் [illegible] பிரான்— 'பணிவிடை [illegible] வுரை புரியவும் பலருடைய மீட்புக்கு விலை

## பணி செய்து உய்வீர்!

ஒன்றையும் கோராதே, எதையும் பதிலாக விரும்பாதே, கொடுக்கவேண்டியிருப்பதைக் கொடு, அது உன்னையே திரும்ப அடையும். ஆனால் அதைப் பற்றி இப்போது நினையாதே. அது ஆயிரம் மடங்காகப் பெருகி உன்னிடம் மீளும் ஆனால் அதில் கவனத்தைச் செலுத்தக்கூடாது. கொடுக்கும் சக்தி உன்னிடம் உண்டு. ஆதலின் கொடு, அதோடு நிற்க.

ஒவ்வோர் ஆணையும் பெண்ணையும் ஒவ்வொருவரையும் பகவானாகக் கருதுக, உம்மால் ஒருவருக்கும் உதவி செய்ய இயலாது பணி செய்ய மட்டும் உமக்கு இயலும். பகவானின் குழந்தைகளுக்குப் பணிசெய்க உமக்கு அப்பேறு கிடைக்குமாயின் பகவானுக்கே பணிசெய்க. பகவானுடைய குழந்தைகளில்

ஞானக்கதிர்

செய்ய இயலும்படி உமக்கு அவர் அருளினால் நீர் பேறு பெற்றவராவீர். உம்மைப் பற்றி அளவுமீறிப் பெருமையாக நினைக்க வேண்டாம். பிறர் பெறாத அப்பேற்றை உமக்கு அளித்தது அவரது அருளே. அதை ஒரு வழிபாடாக மட்டும் செய்க. ஏழைகளும் துய



ருறோரும்நமதுமுத்திக்கென்றே உள்ளனர்.

அதாவது நோயாளி உருவத்தில், பித்தன், பெரு[illegible] உருவத்தில் வரும் [illegible] தாம் பணி செய்து உய்வடையும் பொருட்டு.



பொய்யாமொழி

குறள்:

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின் என்குற்ற மாகும் இறைக்கு

பொருள்:

முன்னே தன்குற்றத்தைக் கண்டு நீக்கிப் பிறகு பிறருடைய குற்றத்தை ஆராயவல்லவனானால், தலைவனுக்கு என்ன குற்றமாகும்.

# மன்னுயிர்க்காகவே தன்னுயிர் நீத்த இயேசு

அவனைச் சிலுவையில் அறையும்! அவனைச் சிலுவையில் அறையும்!! என்கின்ற சத்தம் வானைப் பிளந்து கொண்டிருந்தது. பிலாத்துவின் முன்னே பாபாஸ் என்கிற கொலைகாரன் ஒரு புறம் உலகில் அன்பு கூர்ந்து வழிநடத்த வந்த கிறிஸ்து மறுபுறம்.

இவர்களுக்கிடையே நின்று பிலாத்து ஜனங்களை பார்த்து இவர்களில் யாரை விடுதலையாக்க விரும்புகிறீர்கள் என்று கேட்டபோது முற்றிலுமாக மக்களின் தீர்ப்பு மனுமைந்தனான கிறிஸ்துவுக்கு எதிராக இருந்தது.

கிறிஸ்து உலகில் ஊழியம் செய்து திரிந்தபோது பின்னாலே சென்று நன்மை பெற்றவர்கள் கிறிஸ்துவோடு உண்டு, உடுத்தி, கூடித்திரிந்தவர்கள், திராத தமது நோய்களை கிறிஸ்துவினால் சுகமாக்கிக் கொண்டவர்கள் பிலாத்துவின் முன்னே கிறிஸ்துவுக்கு எதிராக கொக்கரித்தார்கள்.

இவர்களுடைய நன்றிகெட்ட உணர்ச்சியின் பிரதிபலிப்பான அந்த சத்தங்களுக்கு மத்தியிலேயே! இயேசு ஒன்றும் பேசவில்லை! ஒன்றுமே பேசவிரும்பவில்லை. அவர் மௌனம் சாதித்தார்

கிறிஸ்து இந்த அநீதியான தீர்ப்பை பெற்றது இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு யாரை மீட்கவென்று தன்னை அர்ப்பணித்து இப்பூமிக்கு வந்தாரோ அந்த மக்களால் அவர் சிலுவையில் தொங்க வேண்டியேற்பட்டது.

மக்கள் அவரை நியா

தண்டிக்கப்படவேண்டும் இதமரவு.

ஒரு குற்றமுமில்லாத இயேசு மற்றவர்களிடம் இருந்து பெற்ற குற்றச்சாட்டுக்கள் பழிகள்மூலம் அவர் சிலுவையில் அறையப்பட்டார் என்றால்- இந்த அநீதியை எங்கே போய் சொல்வது? யாரிடம் சொல்வது?

அவர் பேசாவிட்டாலும் அவருடைய மௌனம் அனேக உள்ளங்களை ஊடுருவியது ஆனால் அவர்களால் உடனடியாக அதை உணர்ந்து கொள்ள முடியவில்லை.

கலகம் பண்ணி அந்தக் கலகத்தில் கொலைசெய்து அதற்காகக் காவல் பண்

வண. டேவிற் கே. ஜெபநாயகம்

ணப்பட்டவர்களில் ஒருவரான பரபாசை விடுதலையாக்கும்படி கோஷமிட அவர்களை என்ன வழிநடத்தியது? புரிந்து கொள்ளமுடியவில்லை

எமது பாவங்களை தன் சுமையாக ஏற்று எமக்கு புதுவாழ்வு தர வந்த கிறிஸ்துவை சிலுவையில் அறையும்படி கோஷமிட அவர்களை வழி நடத்தியது என்ன? புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் எம்மால் உணர்ந்து கொள்ள முடியும். அதுபோதெனில் மக்களின் மாறுபாடான இதயங்களையும் அதன் பிழையான தெரிவுகளையும் கண்டுகொள்ள முடிகிறது.

மனிதன் எப்போ படைக்கப்பட்டானோ அன்றிலிருந்து அவனுடைய தெரிவு பிழையான தெரிவாகவே அமைந்து வருகிறது.

ஏதேன் தோட்டத்தில் இடையே ஒரு போராட்டம். பரபாஸா? கிறிஸ்துவா? ஏதேன் தோட்டத்தில் நடந்ததைப் போன்று இக்கும் நிலையை மனிதன் தெரிந்து கொண்டான் கிறிஸ்துவை சிலுவைக்கு ஒப்புக்கொடுத்தார்கள் அந்த மனிதர்கள்.

மீண்டும் மீண்டும் பாவச் சேற்றிலே வாழ வேண்டும் என்று அடம் பிடிக்கும் மனிதர்களின் முன்னே! யார் தன்னை சிலுவையில் ஏற்றினார்களோ! அவர்களுக்காக கடவுளிடம் வேண்டினார். 'பிதாவே இவர்களை மன்னியும் தாங்கள் செய்கின்றது இன்னதென்று அறியாமலிருக்கிறார்கள்' என்று அந்த கொலைகாரர்களுக்காக இயேசு பிதாவை நோக்கி வேண்டினார்.

இந்த ஜெபத்திலேயும் கொடூர நெஞ்சுடையவர்களின்

வைத்தார் நன்மைக்கு முன்பாக தீமையைதெரிவு செய்த மனிதன் நாளாந்தம் தன் வழியில் தவறத் தொடங்கினான் தவறத் தொடங்கிய மனிதனை பல வழிகளிலே கடவுள் சந்திக்கத் தொடங்கினார். ஆனாலும் அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை.

மனிதன்மேல் கொண்ட அன்பினால் தன்னையே இவ்வுலகை மீட்க அர்ப்பணித்தார். செயல்பட்டார். மனிதனுடைய திருக்குள்ள இருதயம் கடவுளையும் விட்டுவைக்கவில்லை நன்மையும் நன்மைக்கும்- தீமைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Bitsmans Institutes**
MANIPAY.
பிற்மன்ஸ் இலண்டன் பரீட்சைக்குரிய
சுருக்கெழுத்து, தட்டெழுத்து
Shorthand and Typewriting
(ENGLISH) பயிற்சி வகுப்புக்கள்
ஆரம்பம்: 20-4-87
Mon, 8-00 a. m.

# உதயன்

17-04-1987 வெள்ளிக்கிழமை

**Bitsmans Institutes**
MANIPAY.
ஆங்கிலம், பேச, எழுத வாசிக்க
3 மாத பயிற்சி வகுப்புக்கள்
SPOKEN ENGLISH with GRAMMAR
By
Mr. M. M. தேவராஜா
ஆரம்பம் 25-4-87
Sat 5-00 p. m.

# பிரிட்டிஷ் நிதி உதவி; தமிழ் சிறுர் புறக்கணிப்பு

## தாட்சரிடம் தமிழ் துறவி புகார்

பருத்தித்துறை, ஏப்.17

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நிதி உதவியுடன் இலங்கையில் இயங்கி வரும் எஸ். ஸி. எவ் (சிறுர் பராமரிப்பு) நிறுவனம் இதுவரை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஒரு சதமேனும் செலவழிக்கவில்லை.

ஆனல் பெரும்பான்மை இனத்தவர் வாழும் அனுராதபுரம் பகுதிக்கு மட்டும் கடந்த மாதத்தில் பத்து இலட்சம் ரூபா நிதி இந்த நிறுவனத்தினுல் செலவழிக்கப்பட்டிருக்கிறது.

கஷ்ட நிலையில் அவலமுற்றிருக்கும் சிறுபான்மைத் தமிழ் பேசும் மக்கள் இவ்வாறு புறக்கணிக்கப்படுவதை ஜனநாயகத்தில் விருப்பமுள்ள பிரித்தானிய மக்கள் அனுமதிக்க மாட்டார்கள்.

-பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ருபானந்தா பிரிட்டிஷ் பிரதமர் மார்கிரெட் தாட்சருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் இப்படிப் புகார் தெரிவித்திருக்கிறுர்

தமிழ் துறவி எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ் குடாநாட்டில் இராணுவத்தினரின் செல், ஹெலித் தாக்குதல்களினுல் இருநூறுக்கும் அதிகமான வீடுகள் சேதமுற்றுள்ளன.

இராணுவ முகாம்களின் விஸ்தரிப்பினுல் ஆயிரக்கணக்கான மக்கள் தமது வீடுகளை விட்டு வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

இவ்வாறு யாழ் குடா நாட்டில் வசிக்கும் தமிழ் பேசும் மக்கள் சொல்லொணுத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

இராணுவத்தினர் குடும்பங்களின் பெரியவர்களைக் கொன்று குவிப்பதால் பல நூற்றுக்கணக்கான சிறுவர்கள் அநாதைகளாக்கப்பட்டுள்ளனர். இச் சிறுவர்களைப் பராமரிப்பதற்கு எவ்வித உதவிகளும் கிடைக்கவில்லை.

1983 ஆம் ஆண்டிலிருந்து பல்லாயிரக்கணக்கான தமிழ் சிறுவர்கள் போதிய உணவு, உடை, பாடசாலை உபகரணங்கள் இன்றி கஷ்டப்படுகிறுர்கள்.

இலங்கையிலுள்ள பிரித்தானிய தூதுவராலயத்தில் உள்ள உயர் அதிகாரிகள் தங்கள் நாட்டின் நிதி உதவிகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் பேசும் மக்களுக்கும் கிடைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

சிறுபான்மைத் தமிழ் மக்களின் இந்து ஆலயங்களும், கிறீஸ்தவ தேவாலயங்களும் இராணுவத்தினரால் அழிக்கப்பட்டு வருகின்றன. எம் மக்களுக்கு தங்கள் நாடு உதவ வேண்டும்'' -இவ்வாறு அவர் எழுதியுள்ளார். (உ118)

## அதிசயக் குழந்தை

யாழ்ப்பாணம், ஏப் 17

முற்றிலும் வித்தியாசமான முகவமைப்புடைய குழந்தை ஒன்று யாழ் ஆஸ்பத்திரியில் பிறந்துள்ளது.

சோண்டாவிலைச் சேர்ந்த பெண் ஒருவரே இக்குழந்தையைப் பிரசவித்தார்

மூக்குப்பக்கம் சரிந்த கண்கள், வாயின் இரண்டு பக்கங்களில் தந்தம் போல் அமைப்புடைய வீக்கங்கள், நடுவிலே பிறு வளைந்த சதைப் பகுதி ஆகியவற்றுடன் கூடிய கூரிய அமைப்புடனுன முகத்துடன் இக் குழந்தை பிறந்துள்ளது. (உதட்டின் நடுப்பகுதி பிரிந்து இருக்கவில்லை நாக்கும் புறமோக உண்டு)

உடம்பில் வேறு எந்த விதமான மாற்றமும் காணப்படவில்லை

குழந்தையைப் பார்த்ததும் விநாயகரின் உருவ அமைப்புக் கொண்டதாகவே எண்ணத் தோன்றுகிறது

நேற்றுக்காலையில் பிறந்த இந்த ஆண் சிசு இச்செய்தி எழுதப்படும் வரை சுகமாகவே இருந்தது (உ-10)

## ஜீ. சி. ஈ. (சாதாரண) பரீட்சை

## தனிப்பட்டோரின் பெறுபேறுகள் கல்விப் பணிப்பாளரிடம்

யாழ்ப்பாணம், ஏப் 17

ஜீ சி ஈ சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தமது முகவரிகளைத் தவறுதலாகத் தெரிவித்துள்ளனராம். இத்தகைய பரீட்சார்த்திகளின் பரீட்சைப் பெறுபேறுகள் யாழ் கல்விப் பணிப்பாளருக்கு பரீட்சை ஆணையாளரினுல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதுவரை தங்களது பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளாத தனிப்பட்ட பரீட்சார்த்திகள் 20 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஜனுப் எம். எம். மன்சூர் அறிவித்துள்ளார்.

பரீட்சார்த்திகள் பெறுபேறுகளைப் பெற வரும் பொழுது தேசிய அடையாள அட்டைகளைக் கொண்டுவரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. (உ-10)

## அறிமுக விழா

யாழ்ப்பாணம், ஏப் 17

சொக்கன் எழுதிய சலதி, மத்திச் ஆகிய நூல்களின் அறிமுக விழா எதிர்வரும் ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் நடைபெறும்.

யாழ். இலக்கிய வட்டம் இந்த நிகழ்ச்சியை ஒழுங்கு செய்துள்ளது

திரு. செம்பியன் செல்வன் தலைமை வகிப்பார்

கலாநிதி நா. சுப்பிரமணியம், கவிஞர் காரை செ சுந்தரம்பிள்ளை ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர்.

யாழ் வர்த்தகர் சங்கச் செயலாளர் திரு. எஸ். தமிழ்வாணன், குமாரசாமி ரெக்கார்ட்ஸ் உரிமையாளர் திரு த. குமாரசாமி ஆகியோர் முதற் பிரதிகளை வாங்குவர். (உ-எ)

## புத்தாண்டு கலை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஏப் 17

விட்டுக்கோட்டை கல்வி சமூக அபிவிருத்திக் கழகம் நடத்தும் சித்திரை புத்தாண்டுக் கலை நிகழ்ச்சி நாளை சனிக்கிழமை மாலை வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலை ஆரம்ப பிரிவுக் கட்டடத்தில் நடைபெறும்.

கழகத் தலைவர் திரு தா. தம்பிராசா தலைமை வகிப்பார்.

மாதகல் வ. கந்தசாமி சிதா கல்யாணம் பற்றி சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். மற்றும் பல கலைத்துவ நிகழ்ச்சிகள் இடம்பெறும். (உ-எ)

## அரிசி, மா களஞ்சியத்தில் களஞ்சியப் படுத்தப்படும்

யாழ்ப்பாணம், ஏப். 17

இவ்வாரம் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட அரிசியும், மாவும் கன்னுகம் நெல் களஞ்சியக் கட்டடத்தில் களஞ்சியப் படுத்தப்படவுள்ளன.

''மேர்க்ஸ் றுகுணு'' என்ற கப்பலில் வந்த 1000 தொன் மாவும், மேர்க்ஸ் பெந்தோட்ட கப்பலில் வந்த 1000 தொன் அரிசியுமே களஞ்சியப் படுத்தப்படவுள்ளன.

உணவுத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார். (இ-எ)

## பயங்கரவாதம் சம்பந்தமான வழக்குகளுக்கு முன்னுரிமையளிக்க பணிப்பு

கொழும்பு, ஏப். 17

பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பான வழக்குகளுக்கு முன்னுரிமை கொடுக்கும்படி சட்டமா அதிபர், தனது அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறுர்.

பயங்கரவாத சந்தேக நபர்களுக்காக ஆஜராகும் சட்டத்தரணிகளின் வேண்டுகோளின் பேரில் தான் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச சட்டத்தரணி திரு. டி. பி. குமாரசிங்க தலைமையிலான சட்டத்தரணிகள் குழு, பயங்கரவாத வழக்குகள் பற்றி தீவிர பரிசீலனையை மேற்கொண்டுள்ளன.

சிங்கள, தமிழ் தட்டச்சாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் பற்றாக்குறை காரணமாகத் தான் பயங்கரவாதம் சம்பந்தமான வழக்குகளை பரிசீலனை செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது-- இப்படி அரச சட்டத்தரணி திரு குமாரசிங்க தெரிவித்தார். (உ-எ)

## காரைநகரில் பரிசளிப்பு

யாழ்ப்பாணம், ஏப் 17

காரைநகர் வாரிவளவு நல்லியக்க சபையின் கல்வி ஊக்குவிப்பு பரிசளிப்பு நிகழ்ச்சி நாளை மறுதினம் மாலை 4-30 மணிக்கு சபையின் திறந்த வெளியரங்கில் நடைபெறும்.

ஜீ சி ஈ உயர்தரப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்ற மாணவர்களும், கடந்த ஆண்டில் லீவு எடுக்காது கடமையாற்றிய ஆசிரியர்களும் இந்த நிகழ்ச்சியில் பாராட்டப்படுவர்.

காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சேவையும் நிகழ்ச்சியில் பாராட்டப்படும். (உ)

## பிரார்த்தனை வைபவம்

யாழ்ப்பாணம், ஏப். 17

நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ் சப்பல் வீதி 66 ஆம் இலக்க இல்லத்தில் பிரார்த்தனை வைபவம் ஒன்றை மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் நடத்துகின்றது.

கடந்த மாதம் 27 ஆம் திகதியில் இருந்து மனித உரிமைகளை நிலைபெறச் செய்யுமாறு வேண்டி ஒரு வார காலம் பிரார்த்தனை இயக்கம் நடத்தப்பட்டது. அந்த இயக்கத்தை தொடர்ந்து நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது

கோவில்கள், தேவாலயங்களுடன், வீடுகளிலும் இப்போது பிரார்த்தனைகள் நடைபெறுகின்றன (உ-எ)

## கலாசார அவை கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 17

தமிழர் கலாசார அவையின் பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

அன்பர்கள் இக்கூட்டத்துக்குச் சமுகமளிக்கும்படி வேண்டப்படுகின்றனர். (உ-எ)

## மன்னுயிர்...

(3ஆம்பக்கத்தொடர்ச்சி)

ளும் அவருடைய கடவுளே குத்தினுர்கள். முடிந்தவரைக்கு இதுவரை மரணத்தில் தான் உதிர்த்த அந்த ஏழு வார்த்தைகளிலும் முழு உலகிற்குமான தனது மகிமையை வெளிப்படுத்தினுர் அந்த மகிமை இன்னும் எம் மத்தியிலே பரிசுத்தாவியின் வடிவில் செயல்படுகிறது:

ஆனல் இன்று நியாயத் தீர்ப்பின் காலத்திலேயே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கடவுளுடைய நியாயம் நடந்துகொண்டேயிருக்கிறது. எமது வாழ்வை அவர் சந்திக்கும் போது அவருடைய நியாயத்தீர்ப்பின் முன் எவ்வாழ்வில் யாரை விடுதலைக்காக நாம் கேட்போம். கள்வனை பரபாஸா? ஒன்றுமறியா இறிஸ்துவா? பதில் எம் வாழ்விலே அமைந்துள்ளது.

## குரும்பசிட்டி...

(1ம்பக்கத் தொடர்ச்சி)

னிக்கிழமை காலை 4 மணிக்கு மகாலட்சுமி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள பிரசைகள் குழுக் கூட்டத்தில் தவறுது கலந்துகொள்ளும்படி குழுத்தலைவர் திரு. பொ. சிவசுப்பிரமணியம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ-எ)

மண் மீட்புக்கான

# உயிர்த் தியாகத்துக்கு எதுவுமே நிகரில்லை

## அஞ்சலிக் கூட்டத்தில் உரை

பண்டத்தரிப்பு, ஏப். 17

பொன், பொருள், உழைப்பு ஆகியவற்றைத் தியாகம் செய்வதைவிட உயிர்த் தியாகம் செய்வது உயர்ந்தது. இதன்பலன் அளவிட முடியாதது. அதுவும் மண் மீட்புக்கான உயிர்த் தியாகத்திற்கு சமுதாயத்தில் என்றும் தனித்துவமான இடம் உண்டு

வயாவிளானில் இடம் பெற்ற இராணுவத் துப்பாக்கிச் சூட்டில் வீர மரணம் எய்திய சுந்தையா நாகரத்தினத்தின் (ரூபின்) அஞ்சலிக் கூட்டம் அண்மையில் பண்டத்தரிப்பில் நடைபெற்றது.

அதில் உரையாற்றிய பண்டத்தரிப்பு பங்குத் தந்தை ஜெயக்குமார் அடிகள் மேற்கண்டவாறு கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில் போராளிகளின் மரணங்கள் போராட்டத்திற்கு உத்வேகமும் உரமும் கொடுத்து வருகின்றன என்ருர்.

விதை நெல் தன்னை மண்ணுக்கு இரையாக்கி பலநூறு நெல் மணிகள் உருவாகக் காரணமாகிறது. அதேபோல் ஒருவனின் மறைவும் மேலும் பல நூறு போராளிகள் புனிதப் போராட்டத்தை தொடர உத்வேகமாயிருக்கிறது என்ருர்.

பண்டத்தரிப்பு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி ரூபி பேசுதாசன் உரையாற்றுகையில் எமது இனத்தின் தனித்துவம், கல்வி கலாசாரம், கலை ஆகியவை அழியாமல் காக்க எமது நிலம் எம்மிடம் மீள வேண்டும்.

அதற்கான போராட்டத்தில் இறங்கி தம்மைச் சுகபோகங்களை துறந்து மெழுவர்த்திபோல் எமக்காகத் தம்மை அழிக்கும் போராளிகளுக்கு மதிப்பும், உதவியும் நாம் வழங்க வேண்டும் என்ருர்.

பண்டத்தரிப்பு விழிப்புக்குழுத் தலைவர் திரு. எஸ். ஏ. செபரத்தினம், ஆசிரியர் திரு. எம். கே. பத்மநாதன், மறை ஆசிரியர் திரு. சௌந்தரராசன், விடுதலைப் புலிகளின் பிரதேசப் பிரதிநிதி உட்பட பலர் உரைநிகழ்த்தினர். (இ-180)

## விமானம் வீழ்த்தப்பட்டது

லண்டன், ஏப். 16

ஆப்கானிஸ்தானின் நிலப் பிராந்தியத்திற்கு மேலாகப் பறந்த ஆப்கானிஸ்தான் விமானம் ஒன்றை தாங்கள் சுட்டு வீழ்த்தியதாக பாகிஸ்தான் நேற்று அறிவித்தது. (உ)

## சந்திப்பு

பிரிட்டிஷ் உள்துறை இணை அமைச்சர் திரு டேவிட் வாடிங்டன் கடந்த புதன்கிழமை பிரதம நீதியரசர் திரு எஸ். சர்வானந்தா, உள்நாட்டமைச்சர் திரு கே. டபிள்யு தேவநாயகம் ஆகியோரைச் சந்தித்துப் பேசினுர்.

நேற்று (வியாழன்) இரவு கூட்டணிப் பிரமுகர்களான டாக்டர் நீலன் திருச்செல்வம், திரு எஸ். குலசேகரம், அமைச்சர் எஸ் தொண்டமான் ஆகியோரையும் அவர் சந்திப்பதாக இருந்தது (உ-எ)

## ஆராதனை

இலங்கை பெந்தகொஸ்தே சபையின் வருடாந்தமாநாடும் சுவிசேஷ ஆராதனைகளும் இம்மாதம் 23ஆம் திகதி முதல் 26ஆம் திகதிவரை மாலை 5 30 மணிவரையில் யாழ்ப்பாணம் சுண்டுக்குளி இல 111, கண்டி வீதியில் நடைபெறவுள்ளன. (உ-161)

# இலங்கை அணிக்கு 3 விக்கெட்டுக்கு 141

கொழும்பு,ஏப். 17

இலங்கை-நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் கொழும்பில் நேற்று ஆரம்பமான முதலாவது கிரிக்கெட் டெஸ்டின் முதல்நாள் ஆட்டம் மழை காரணமாக நேரத்துடன் முடிக்கப்பட்டது

இரண்டு மணித்தியால விளையாட்டு நேரம் நேற்று மழையினுல் வீணுனது.

நேற்று ஆட்டம் நிறுத்தப்பட்டபோது முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 3 விக்கெட்டுகளை இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பிரண்டன் குருப்பு ஆட்டமிழக்காமல் 66, அஸங்க குருசிங்க 22, ரோய் டயஸ் 25 ஓட்டங்களைப்பெற்றனர். நேற்று ஆட்டமிழந்த மற்றைய வீரர் ரோஷான் மகாநாம.

ரிச்சர்ட் ஹாட்லி 44 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை வீழ்த்தினுர்

இன்று ஆட்டத்தின் ஓய்வுநாள். மீண்டும் நாளை ஆட்டம் ஆரம்பமாகும். (உ)

## 5 இந்திய வீரர்களுக்கு அபராதம் விதிப்பு

புதுடில்லி, ஏப் 17

கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகளின் போது தமது விளையாட்டு உடுப்புகளில் விளம்பர விடயங்களைச் சேர்த்துக் கொண்டதற்காக ஐந்து இந்திய கிரிக்கெட் வீரர்கள் மீது அபராதம் விதிக்கப்பட்டது.

அப்படி நடந்துகொண்டதற்காக அவர்களிடம் விளக்கமும் கோரப்படும் என அறிவிக்கப்படுகிறது

இந்திய அணித்தலைவர் கபில் தேவ் முன்னணி வீரர்களான கவில் கவாஸ்கர், ரவி சாஸ்திரி, கிருஷ்ணமாச்சாரி, ஸ்ரீகாந்த், திலீப் வெங்சர்க்கார் ஆகியோர் ஐந்து பேருக்குமே தலா 400 டாலர் வரை அபராதம் விதிக்கப்படலாம் என அறிவிக்கப்படுகிறது.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இப்படி அறிவித்திருப்பதாக பம்பாய் பத்திரிகை ஒன்று தெரிவித்திருக்கிறது

இந்தியாவில் அவுஸ்திரேலிய, பாகிஸ்தான், இலங்கை அணிகள் கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொண்டபோதே இவர்கள் ஐவரும் விளம்பரங்களைத் தாங்கும் உடுப்புக்களை அணிந்து விளையாடியதாகக் கூறப்படுகிறது. (உ)

# தபால் மூலமான ஆசிரியர் பயிற்சி

பலாலி, ஏப். 17

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் உள்வாரி மாணவர்களாக மட்டுமன்றி தபால் மூலமான ஆசிரியப் பயிற்சி நெறியையும் மேற்கொள்ளும் திட்டம் தற்போது அமுலுக்கு வந்துள்ளது.

கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் இப்பயிற்சி நெறி தராதரப்பத்திர மற்ற நிரந்தர ஆசிரியர்களுக்கு, குறிப்பாக கணித, விஞ்ஞான, ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு மட்டுமே தற்போது வழங்கப்படுகின்றது.

சம்பள லீவு எடுக்காத முறையில் இந்நெறியைப் பயின்று கொள்ளலாம்.

பயிற்சியின் பின் உள்வாரியாக ஆசிரிய கலாசாலைகள் மூலம் பெறப்படும் அதே சான்றிதழ்களும், சம்பளத்திட்டமும் உடனடியாக வழங்கப்படும். (இ-119)

## சட்டசபை --

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மொழியை மீறிய செயலாகும்—

இப்படி உயர் நீதிமன்றம் மேலும் தெரிவித்து, மறுவிசாரணைக்கு ஆயத்தம் செய்யப்பட்ட 10 திமுக எம். எல். ஏக்களின் மனுக்களையும் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தது (உ-எ)

# இராணுவ மோதல் மங்கிபிரிட்ஜ் முகாமில்

கொழும்பு, ஏப். 17

திருகோணமலை மங்கி பிரிட்ஜ் இராணுவ முகாமில் தான் சிப்பாய்களுக்கு இடையே கலகம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கள் இச்சம்பவம் இடம் பெற்றது.

உயிரிழந்த சிப்பாய்களின் பெயர்கள் வருமாறு:- சேனநாயக்கா, கருணாரத்தின, லலித் எதிர்சிங்கா.

இவர்களைச் சுட்டுக் கொலை செய்த பின்னர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்ட சிப்பாயின் பெயர் வசந்தகுமார.

சேனநாயக்காவும் வசந்தகுமாரவும் திருமலைக் கடற்படைத் தள ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தனர் மற்ற இரண்டு சிப்பாய்களும் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்ட பின் அங்கு மரணமானுர்கள். (உ-எ)

விசாரணையின்றி காவலில் இருக்கும்

# தமிழ் கைதிகளை விடுவிக்குமாறு கோரிக்கை

## நவசமசமாஜக் கட்சி அறிக்கை

கொழும்பு,ஏப்.17

18 மாதங்களுக்கு மேலாக விசாரணை இன்றித் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலைசெய்யுமாறு மனித உரிமைகளில் அக்கறையுள்ள ஒவ்வொருவரும் வலியுறுத்தவேண்டும்.

இப்படி நவசமசமாஜக் கட்சி விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்சிப் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன இந்த அறிக்கையை விடுத்திருக்கிறுர்

தமிழ் அரசியல் கைதிகள் தேசியவாத நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இத்தமிழ் இளைஞர்களை சோஷலிசத்தின் பக்கம் திரும்பிப் பார்க்கச் செய்ய இடதுசாரிக் கட்சிகளுக்கு இது ஓர் அரிய சந்தர்ப்பமாகும்.

இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (உ-எ)

யாழ். ஆஸ்பத்திரி
இரத்த வங்கி
உங்கள் சேவையை
எதிர்பார்த்து நிற்கிறது!
இரத்த தானம் செய்யுங்கள்!
விரைந்து செய்வீர்!!
தொடர்ந்து செய்வீர்!!!
தானத்தில் சிறந்தது இரத்ததானம்

உயிர் காக்கும்
சஞ்சீவி

இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் உங்கள் உடன் பிறப்புக்களின் உயிர்கள் விலைமதிக்க முடியாத, திரும்பப் பெற இயலாத மாபெரும் சொத்துக்கள்.

மரணத்துடன் போராடுபவரை நீங்களும் காப்பாற்றலாம்

உயிர் காப்பது
உன்னத பணி

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தாரால் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்ட திகதி 17-04-1987
Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 15, Second Lane, Power House Road, JAFFNA.
Registered as a Newspaper at the General Post Office Under Number QJ / 94 / N / 87 Telephone, 24805, 22078

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org